[illegible] பக்கங்கள்: 04 விலை ரூபா: 4-50

# ஈழநாதம்

THE EELANAATHAM Peoples Daily மக்கள் தினசரி

நாதம்: 02 திருவள்ளுவர் ஆண்டு 2022 ஆனி 23 (07 07 1991) ஞாயிற்றுக்கிழமை ஓசை: 139

## மூக்குக் கண்ணாடியின்றி முப்பரிமாணப் படங்கள்

(டோக்கியோ)

விசேட மூக்குக் கண்ணாடிகளை அணியாமல் முப்பரிமாணத் திரைப்படங்களைப் பார்க்கக்கூடிய பதினாறு அங்குல தொலைக்காட்சிப்பெட்டி ஒன்று ஜப்பானில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. ஜப்பானிய மின் அதி நவீன கண்டுபிடிப்பான இது டோக்கியோவில் ஒரு கண்காட்சியில் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளது. என். எஸ். கே. (4ஆம் பக்கம் பார்க்க)

பிரிட்டன் தூதுவர் கிளஸ்ரோன் விவகாரத்தில்

# விளைவுகளை எதிர்பார்த்தே நடவடிக்கை எடுக்கப்பட்டது

## பத்திரிகையாளரிடம் பிரட்மன் வீரக்கோன்

(கொழும்பு)

சிறிலங்கா அரசு தனக்குச் சரியெனப்பட்ட தீர்மானத்தையே எடுத்தது. இதுபற்றி பிரிட்டன் அரசின் தீர்மான விளைவுகளை எதிர்பார்த்தே உள்ளது. இவ்வாறு நேற்றுக்காலை கிராமோதயசபை மண்டபத்தில் நடந்த வாராந்த செய்தியாளர் மாநாட்டில் பேசிய சிறிலங்கா ஜனாதிபதியின் சர்வதேச விவகாரங்களுக்கான ஆலோசகர் பிரட்மன் வீரக்கோன் கூறியுள்ளார்.

அவர் மேலும் பேசுகையில் சிறிலங்காவில் பிரிட்டன் தூதுவர் டேவிட் கிளஸ்ரோன் வெளியேற்றப்பட்டமைக்கும், பிரிட்டன் அரசு கூறும் மனித உரிமை மீறல் விவகாரத்திற்கும் எதுவித சம்பந்தமும் இல்லை என்று சிறிலங்கா அரசு மறுப்புத் தெரிவித்துள்ளது.

நேச நாடுகளிடையே சிக்கல் ஏற்பட்டால் அது உண்மையிலேயே வருந்தத்தக்கது எனக்கூறிய பிரட்மன், பிரிட்டன் அரசின் தீர்மானங்கள் கொழும்பில் ஆராயப்படுவதாகத் தெரிவித்தார். இரு நாடுகளும் மீண்டும் சமரச உடன்பாட்டிற்கு வரத்தக்க தீர்மானங்களை மறுத்து ஏற்றுக் கொள்ள வேண்டியிருப்பதால் இரு நாடுகளின் உறவை மேலும் பாதிக்கக்கூடிய எந்தக் கருத்தையும் கூறாமல் மிக நாசூக்காகப் பேசியுள்ளார் என பி. பி. சி கூறியது.

(4ஆம் பக்கம் பார்க்க)

## அகதி முகாம்களிலும் பொலிஸார் விசாரணை

(கொழும்பு)

கொழும்பு நகரில் உள்ள அகதி முகாம்களையும் சிறிலங்கா பொலிஸார் முற்றுகையிட்டு தேடுதல் நடத்தியிருப்பதாக அங்கிருந்துவரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

கடந்த புதன்கிழமை பம்பலப்பிட்டி அகதிமுகாமிற்குச் சென்ற சிறிலங்கா பொலிஸார் அங்கிருந்த அகதிகளை விசாரணை செய்ததாகவும் அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

## யாழ்ப்பாணத்திலிருந்தே ஜெலிக்னைட் சென்றது

யாழ்ப்பாணத்திலிருந்து கொண்டுவரப்பட்ட ஜெலிக்னைட்டைக் கொண்டே கூட்டுப்படைத்தலைமையகத் தாக்குதலுக்குப் பயன்படுத்தப்பட்ட குண்டு தயாரிக்கப்பட்டது என்று இச்சம்பவம் தொடர்பாக விசாரணைசெய்து வரும் விசேட பொலிஸ் குழுவினர் தெரிவித்துள்ளனர்.

இந்த ஜெலிக்னைட் குண்டு வெடிப்பு நிகழ்வதற்கு இரு கிழமைக்கு முன்னர் யாழ்ப்பாணத்தில் இருந்து கொண்டு வரப்பட்டதாகவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

## கொழும்பு பாதுகாப்பிற்கு புதிய திட்டம்

கொழும்பிற்கான புதிய பாதுகாப்புத் திட்டமொன்றைப் பொலிஸார் ஆரம்பித்துள்ளனர். இதில் பொதுமக்கள் பொலிஸாருடன் தொண்டர்களாகப் பணிபுரிவர். பொலிஸாரின் மேற்பார்வையில் பொதுமக்கள் வாகனங்களை நிறுத்திச் சோதனையிடுவர். இதன் மூலம் பொதுமக்கள் அனைவரும் விழிப்புணர்வுடனும், எச்சரிக்கையுடனும் இருக்க முடியும் என்று வாராந்தச் செய்தியாளர் மாநாட்டில் சிறிலங்கா பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஜெனரல் (4ஆம் பக்கம் பார்க்க)

## தமிழக மீனவர்களுக்குப் புதிய கட்டுப்பாடு

(சென்னை)

இலங்கைத்தமிழ்ப் போராளிகளின் நடமாட்டத்தைக் கட்டுப்படுத்தும் முகமாக இந்தியா தமிழ்நாட்டுக் கரையோரங்களில் மட்டுப்படுத்தப்பட்ட வலயத்தைச் செயற்படுத்தவுள்ளது.

கடலுக்கு மீன்பிடிக்கச் செல்லும் தஞ்சை, புதுக்கோட்டை, இராமநாதபுரம் மாவட்டமீனவர்கள் வரும் திங்கட்கிழமை காலை ஆறு மணிமுதல் ஆறுபாக ஆழத்திற்கு மேலுள்ள கடற்பகுதிகளில் மீன் பிடிக்கச் செல்லக் கூடாது என்று தமிழ்நாடு அரசு உத்தரவு பிறப்பித்துள்ளது. இந்த உத்தரவை (4ஆம் பக்கம் பார்க்க)

## செங்கல்பட்டில் ஐவர் கைது

(சென்னை)

காலாவதியான கடவுச்சீட்டுடன் நடமாடிய ஐந்து இலங்கையர்கள் செங்கல்பட்டு மாவட்டத்தில் தமிழகப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

## தொண்டர் ஆசிரியர்களின் ஆர்ப்பாட்ட ஊர்வலம்

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்ட தொண்டர் ஆசிரியர்கள் நாளைமறுபெரும் ஆர்ப்பாட்ட ஊர்வலம் ஒன்றை நடாத்தவுள்ளனர். தொண்டர் ஆசிரியர்களின் நிரந்தர நியமனத்திற்கான வேலைகளை துரிதப்படுத்துமாறும் இவ் ஆசிரியர்கள் சம்பந்தப்பட்ட அனைத்து பிரச்சினைகளுக்கும் உடனடியாக நடவடிக்கை எடுக்கும்படியும் கோரி மேற்படி ஆர்ப்பாட்ட ஊர்வலம் நடாத்தப்படவிருக்கின்றது.

நாளைகாலை9 00 மணிக்கு யாழ். ஸ்ரான்லி வீதியில் உள்ள பட்டப்படிப்புகள் கல்லூரியில் இருந்து ஆரம்பமாகும் இவ் ஊர்வலம் யாழ். கல் (4ஆம் பக்கம் பார்க்க)

## 11ஆவது பட்டமளிப்பு விழா சிறப்பாக நடைபெற்றது

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழகத்தின் பதினோராவது பட்டமளிப்பு விழா நேற்று கைலாசபதி கலையரங்கில் பல்கலைக்கழக மரபுகளுக்கேற்ப வெகு சிறப்பாக நடைபெற்றது.

காலையிலும், நண்பகலிலும் இரு அமர்வுகளாக நடைபெற்ற இப்பட்டமளிப்பு விழாவிற்கு துணைவேந்தர் பேராசிரியர் அ. துரைராஜா அவர்கள் தலைமைதாங்கிப் பட்டங்களை வழங்கினார்.

நேற்றைய பட்டமளிப்பு (4ஆம் பக்கம் பார்க்க)

## பிரி. லக்கியின் தலைமையில் புலனாய்வுக்கு முயற்சி?

(கொழும்பு)

பிரிகேடியர் லக்கி அல்கம தலைமையில் புலனாய்வுப் பிரிவொன்று ஆரம்பிக்கப்படவுள்ளதாகக் கொழும்புப் பத்திரிகைகளில் செய்திகள் வெளியாகியிருந்தன. லக்கி அல்கம பாகிஸ்தான் தேசிய பாதுகாப்புக் கல்லூரியில் பயிற்சியை முடித்துக் கொண்டு சமீபத்தில் நாடு திரும்பியவராவார்.

பாதுகாப்பு அமைச்சின் உயர் அதிகாரி ஒருவர் பிரிகேடியர் லக்கி அல்கமவை அழைத்து ஏற்படவிருக்கும் புலனாய்வு அமைப்பு பற்றி ஆலோசித்ததாகவும் தெரிய வருகிறது.

பிரிகேடியர் லக்கி அல்கம பாதுகாப்பு அமைச்சு அதிகாரி தன்னை அழைத்து புலனாய் (4ஆம் பக்கம் பார்க்க)

வலி. வடக்கில் இராணுவப் பிடியில்

## ஒன்பது பொதுமக்கள் மருத்துவமின்றி மரணம்

(யாழ்ப்பாணம்)

வலி. வடக்கில் சிறிலங்கா இராணுவத்தின் பிடியில் சிக்கியிருந்த ஒன்பது பொதுமக்கள் போதிய மருத்துவ வசதியின்மையால் மரணமடைந்துள்ளனர்.

சிறிலங்கா இராணுவத்தினர் மேற்படி பகுதிக்குள் பிரவேசித்தது முதல் இன்றுவரையிலான காலப்பகுதியில் இம் மரணங்கள் நிகழ்ந்துள்ளன. இவ்வாறு அப்பகுதியிலிருந்து மீண்டுவந்தவர்கள் தெரிவித்தனர்.

(4ஆம் பக்கம் பார்க்க)

## பண்டத்தரிப்பில் உயிர்த்த மனிதரின் கூத்து

(யாழ்ப்பாணம்)

விடுதலைப் புலிகள் கலை, பண்பாட்டுக்கழகத்தின் ஆதரவில் நாடக அரங்க கல்லூரியினரால் நடாத்தப்பட்டுவரும் "உயிர்த்த மனிதரின் கூத்து" என்ற நாடகம் இன்று மாலை 4·30 மணியளவில் பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரியில் நடைபெற உள்ளது.

காலையும் மாலையும் இரு காட்சிகளாக நடைபெற இரு (4ஆம் பக்கம் பார்க்க)

## ராஜீவிற்கு பாரதரத்னா விருது

(புதுடில்லி)

இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்திக்கு இந்தியாவின் அதி உயர் விருதான "பாரதரத்னா" விருது அவரது மறைவுக்குப் பின் நேற்று வழங்கப்பட்டது. குடியரசுத்தலைவர் மாளிகையில் தர்பார் மண்டபத்தில் இடம்பெற்ற விசேட நிகழ்ச்சியில் இவ்விருது வழங்கப்பட்டது.

(4 ஆம் பக்கம் பார்க்க)

## விளம்பரம்

### அக்குபங்சர் டிப்ளோமா வகுப்புக்கள்

வடஇலங்கை அக்குபங்சர் சங்கத்தால் நடாத்தப்படும் டிப்ளோமா வகுப்புகட்கு விண்ணப்பம் கோரப்படுகின்றன. 15-07-91க்கு முன் 35, நாவலர் வீதி, யாழ்ப்பாணத்தில் தொடர்பு கொள்க.

(R/1513)

### இலவச அக்குபங்சர் சிகிச்சை

மருத்துவக் கல்லூரி விரிவுரையாளரால் இலவச அக்குபங்சர் சிகிச்சை சகல ரோகிகட்கும் அளிக்கப்படும். திங்கள், புதன், வெள்ளி, 101 - (33) பலாலி வீதி, கந்தர் மடத்தில். ஏனைய நாட்களில். நவீன வைத்தியசாலை, மானிப்பாய்.

(R/1515)

### அக்குபங்சர் ஹோமியோபதி சிகிச்சை

கொழும்பு தெற்கு அரச வைத்தியசாலையில் கடமையாற்றும் விரிவுரையாளர்களினால், நாரிப்பிடிப்பு, மூட்டு வாதம், தொய்வு, தபாலக்குத்து, மனநோய், தோல் வியாதிகள் நரம்பு தொடர்பான தீராத நாட்பட்ட நோய்களுக்கும் சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. மேலதிக விபரங்களுக்கு; இல. 121/2, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். இல. 95, யாழ் வீதி, மானிப்பாய். திருமதி சத்தியமூர்த்தி, புகையிரத நிலைய வீதி, கொக்குவில்.

(R-1518)

## தாதியர் பயிற்சி நெறி
## TRAINING FOR NURSING

(19-07-91இல் புதிய பயிற்சி நெறிகள் ஆரம்பமாகின்றன)

(சென். ஜோன்ஸ் அம்புலன்ஸ் தாதியருக்கான பாடத்திட்டம் பரீட்சை, பெறுபேறுகள்)

1. சர்வதேச தகைமையுடைய சான்றிதழ்
2. உள்நாட்டு, வெளிநாட்டு வேலை வாய்ப்புக்கு ஏற்றது.

தகைமை: க. பொ. த. (சாதாரணம்)

காலம்: ஒரு வருடம்
பாடத்திட்டம் 6 மாதம்
செய்முறைப் பயிற்சி 6 மாதம்

பயிற்சி நெறிக்கான முழுக்கட்டணம் 1500

(இலகு தவணை முறைகளில் செலுத்தலாம்)

மாணவர் தொகை மட்டுப்படுத்தியுள்ளதால் முன்கூட்டியே பதிவு செய்யவும்.

குறிப்பு: மாவீரர் குடும்பத்தவருக்கு இலவசக் கல்வி

அதிபர்
வைத்திய கலாநிதி வி. பி. சுந்தரராஜன்

### சாயி மருத்துவக் கல்லூரி

இல. 6, பருத்தித்துறைவீதி (1 ஆம் ஒழுங்கை)
(மக்ரவல்ஸ் அருகில்)
யாழ்நகர்.

(B/2791)

## 6ஆம் மாதநினைவஞ்சலி

அன்னை மடியில்
19.04.1925

ஆண்டவன் அடியில்
11-01-1991



அமரர்

### உயர்திரு. மருதப்பு கயிலாசபிள்ளை (இரத்தினம்)

(பழக்கடை வியாபாரி)

எம்மை அன்புடனும் பண்புடனும் வளர்த்து ஆளாக்கி வாழ்க்கையிலும் வழிகாட்டியாக இருந்த எமது அன்புத் தெய்வமே! எம்மை விட்டுப் பிரிந்து அரை ஆண்டு சென்றாலும் உங்கள் நினைவு எமது நெஞ்சங்களை விட்டு நீங்காது.

உங்கள் ஆத்மா சாந்தியடைய நல்லைக்கந்தனை பிரார்த்திக்கின்றோம்.

2, 2 ஆம் ஒழுங்கை
பிறவுண் வீதி
யாழ்ப்பாணம்.

மனைவி, மக்கள், மருமக்கள்
பேரப்பிள்ளைகள்.

(R/1516)

## புங்குடுதீவு – நயினாதீவு ப. நோ. கூ. சங்கம்
(வரையுள்ளது)

### கீழே குறிப்பிட்ட பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன

1. நிபந்தனைகளும் தகைமைகளும்

பதவி வெற்றிடங்கள்

(அ) கணக்காளர் தரம் 111

கல்வித் தகைமைகள்: கூட்டுறவு வேலையாளர் ஆணைக்குழு பிரமாணங்களுக்கமைய இருத்தல் வேண்டும்.
வயது: 23 — 40.
சம்பளத் திட்டம்: 1005 — 1705 / 40x3 — 50x10 இதர படிகளும்
பிணை ரொக்கம்: 2000/-, ஆதனம்; 3000/-

(ஆ) கணக்குப் பதிவாளர்

கல்வித் தகைமைகள்: கூட்டுறவு வேலையாளர் ஆணைக்குழு பிரமாணங்களுக்கமைய இருத்தல் வேண்டும்;
வயது: 20 — 40
சம்பளத் திட்டம்; 905 — 1605 / 40x5—50x10 இதர படிகளும்,
பிணை ரொக்கம்: 2000/-

(இ) பொது லிகிதர்:

கல்வித் தகைமைகள்: கூட்டுறவு வேலையாளர் ஆணைக்குழு பிரமாணங்களுக்கமைய இருத்தல் வேண்டும்.
சம்பளத் திட்டம்; 730 — 1055 / 20x10 — 25 x 5 இதர படிகளும்
வயது: 18 — 40
பிணை ரொக்கம்: 1000/-

(ஈ) காவலாளி

கல்வித் தகைமை: 5ஆம் வகுப்பு சித்தி,
சம்பளத் திட்டம்: 700 - 950 / 15 x 10—20 x 5 இதர படிகளும்,
வயது: 18 — 40, பிணை ரொக்கம்: 1000/-

விண்ணப்பங்கள் யாவும் சொந்தக் கையெழுத்தில் பூர்த்திசெய்து 23-7-1991க்கு முன் நேரில் அல்லது பதிவுத் தபால் மூலம் கீழ்க்காணும் விலாசத்திற்கு அனுப்பி வைக்கவும்.

மேலதிக விபரங்களை சங்கக் காரியாலயத்தில் பார்வையிடலாம்.

பொது முகாமையாளர்
புங்குடுதீவு-நயினாதீவு ப. நோ. கூ. சங்கம்,
புங்குடுதீவு.

(B-2790)

## நினைவு கூருகின்றோம்...

### 1991 - 07 - 07

1987ஆம் ஆண்டு இதேதினத்தில் மண்டானில் சிறிலங்காப்படையினருடனான மோதலில் வீரமரணமெய்திய

நரேஷ் (மதவடி, தொண்டமனாறு)

திருக்கோணமலை, சாம்பல் தீவில், சிறிலங்காப் படையினரால் சுட்டுக்கொல்லப்பட்ட 2 மாணவர்கள் உட்பட 12 தமிழர்கள்

திருக்கோணமலை, சம்பூரில் சிறிலங்காப் படையினரின் நடவடிக்கைகளால் கொல்லப்பட்ட 8 தமிழர்கள்

சிறிலங்காப்படையினரின் துப்பாக்கிச் சூட்டில் காயமுற்று, மரணமடைந்த யாழ். வீமன்காமம் மகாவித்தியாலய அதிபர்

1989ஆம் ஆண்டு விளானில் தேசவிரோதிகளால் சுட்டுக் கொல்லப்பட்ட பண்டத்தரிப்பைச் சேர்ந்த தமிழ்ப் பொது மகன்

1990ஆம் ஆண்டு மட்டக்களப்பில் சிறிலங்காப் படையினரால் வெட்டிக் கொல்லப்பட்டு எரிக்கப்பட்ட தமிழ்ப் பொதுமகன்

கிண்ணியாவில் எரிந்த நிலையில் சடலங்களாக மீட்கப்பட்ட 30 தமிழர்கள்

திருக்கோணமலை, மட்டப்புக்கழி, நல்லூர் ஆகிய பகுதிகளில் சிறிலங்கா இராணுவத்தினராலும், ஊர்காவல் படையினராலும் பாலியல் வன்முறைக்கு உட்படுத்தப்பட்டுக் கொல்லப்பட்ட 10 தமிழ்ப் பெண்கள், கழுத்து வெட்டிக் கொல்லப்பட்ட 20 ஆண்கள்

யாழ்ப்பாணம் பண்ணை வீதியில் சிறிலங்காப் படையினரால் சுட்டுக்கொல்லப்பட்ட தமிழ்ப் பொதுமகன்

ஆகியோரை இந்நாளில் நினைவு கூருகின்றோம்.

-விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி

(B. 2786)

## சிந்தனைக்கு

நம்மை எடைபோடும் தராசிலேயே, நம் அண்டை வீட்டுக்காரரையும் எடைபோட நாம் பொதுவாக முன்வருவதில்லை.

— தாமஸ் ஏ கெம்பிங்


# ஈழநாதம்

31, மகேந்திராவீதி, யாழ்ப்பாணம். 07.07.1991

தொலைபேசி

ஆசிரியபீடம்: 025-2839 நிர்வாகபீடம்: 2208

தநபெ.எண் 05


## 'சார்க்'கை சாதகமாக்க முயலும் சிறிலங்கா

நாடுகளின், எல்லைகளைக் கடந்து 'பயங்கரவாதக் குழுக்களின்' செயற்பாடுகளைத் தடுக்கும் வழிமுறைகள் பற்றி நவம்பரில் கொழும்பில் நடைபெறவுள்ள சார்க் மாநாட்டின் முன்னோடிக் கூட்டமாக மாலைதீவில் நடைபெற்ற சார்க் நாடுகளின் வெளிவிவகார அமைச்சர்கள் மாநாட்டில் ஆராயப்பட்டது. இதைத் தொடர்ந்து கொழும்பில் நடைபெறும் சார்க் மாநாட்டிலும் இது தொடர்பான விடயம் நிகழ்ச்சி நிரலில் இடம் பெறும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

ஆனால், இந்த விவகாரம் தொடர்பாய் வெளியுறவு அமைச்சர்களின் கூட்டத்தில் இந்தியாவும், பாகிஸ்தானும் பெரும் அக்கறை காட்டியதாகத் தெரியவில்லை. சிறிலங்காவே கடந்த காலத்தைப் போன்று இந்த விடயத்தில் இம்முறையும் அக்கறை காட்டியது சிறிலங்கா. கடந்த இரண்டு வருடத்திற்கு முன்னர் நடந்த சார்க் மாநாட்டில் இந்த விவகாரம் பற்றி எழுப்பிய குரலைத் தொடர்ந்து கொள்கை அளவில் இவ்விவகாரம் ஏற்றுக் கொள்ளப்பட்டதாயினும் அது சட்டவாக்கம்பெறவில்லை.

இந்தவிவகாரத்தை சார்க்கின் சட்டவரம்பிற்குள் உள்ளாக்கி விடின் இலங்கையின் வடக்கு கிழக்கில் நடைபெறும் ஆயுதப் போராட்டத்தை ஒரு கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்து விடலாம் எனச் சிறிலங்கா எண்ணுகின்றது. இது தமிழீழ விடுதலைப் போராட்டம் பற்றிய சிறிலங்காவின் தப்புக் கணக்காகும் அதே வேளை சார்க்கின் முன்னணி நாடுகளும் சிறிலங்காவின் இக் கோரிக்கைக்கு பெரிதாகச் செவிமடுப்பதாக இல்லை.

"சார்க் அமைப்பின் முன்னணி நாடுகளான இந்தியாவும், பாகிஸ்தானும் இப்பிரேரணைக்கு ஆதரவு வழங்குவதென்பது அவர்களின் தென்ஆசியா தொடர்பான வெளியுறவுக் கொள்கையையே குழிதோண்டிப் புதைப்பதற்கு ஒப்பான செயலாகும்.

இன, மத, மொழி பேதங்கள் மலிந்த பல்தேசிய இனங்கள் வாழும் சார்க் அமைப்பு நாடுகளின் பிராந்திய வல்லரசு என்ற எண்ணம் கொண்ட இந்தியாவும், இந்தியாவைப் பலவீனப்படுத்துதல் என்ற ஒரே நோக்குக் கொண்ட பாகிஸ்தானும் இப்பிராந்தியத்தின் இன, மத, மொழி வேறுபாடுகளையே தமது முதலீடுகளாகப் பயன்படுத்துகின்றன.

இந்தியா தன்னைச் சூழவுள்ள பாகிஸ்தான், பங்களாதேஷ், சிறிலங்கா, நேபாளம் ஆகியவற்றுடன் ஏதோ ஓர் விடயத்தில் முரண்பாடு கொண்டுள்ளது. அந்த நாடுகளுக்கு ஆயுதப் போராட்டங்களை ஏற்றுமதியும் செய்து வந்துள்ளது. அதே போன்று பாகிஸ்தானும் இந்தியாவிற்கும், தனது அண்டை நாடான ஆப்கானிஸ்தானுக்கும் ஆயுதப் போராட்டங்களை ஏற்றுமதி செய்து வந்துள்ளது. ஆனால், சிறிய நாடுகளான சிறிலங்கா, பங்களாதேஷ் போன்றவை ஆயுதப் போராட்டங்களை ஏற்றுமதி செய்யும் நாடுகளாக இருக்கவில்லை. ஆனால், இந்த நாடுகளும் ஆயுதப் போராட்டங்களை ஏற்றுமதி செய்யாமல் இருப்பதற்கு அவற்றின் பலவீனமே காரணம் ஒழியவிருப்பின்மைகாரணமல்ல. இதனை இந்த நாடுகள் வல்லரசுகளுடன் இணைந்து அல்லது பிராந்திய நண்பர்களுடன் இணைந்து மற்றவர்களுக்கு எதிராய் செயற்படுவதில் இருந்தே புரிந்து கொள்ளலாம்.

ஆனால், இந்தியப் பிரதமர் ராஜீவ்காந்தி கொல்லப்பட்டதைத் தொடர்ந்து இந்தியாவில் தீவிரவாதத்திற்கு எதிராக தோன்றியுள்ள உணர்ச்சி அலையைப் பயன்படுத்தி சிறிலங்கா இச்சட்டவாக்கத்தைச் 'சார்க்' மாநாட்டில் நிறைவேற்றிவிடலாம் என எண்ணுகின்றது. தற்பொழுது இந்திய தரப்பிலும் இதற்கு ஆதரவான சில கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டிருப்பினும் சட்டவாக்கத்தை முழுமையாக இந்தியா ஆதரித்ததாக இல்லை. பிராந்திய வல்லரசு நோக்கில் செயற்படும் இந்தியா இந்தச் சட்டவாக்கத்தை உணர்ச்சிகரமான நிலையில் ஆதரிக்கும் என சிறிலங்கா எண்ணியிருக்குமானால் அது ஒரு ஏமாற்றமளிக்கும் விடயமாகவே இருந்திருக்கும். ராஜீவ் இறந்தார் என்பதற்காக இந்தியா தனது அபிலாசைகளை எவ்வாறு கைவிடமுடியும்? அவ்வாறு கைவிடின் இந்தியாவின் இந்து சமுத்திர ஆதிக்கஎண்ணம் என்ன ஆவது?

## இறந்த கணவரை எண்ணி அழுவதற்குக்கூட இராணுவம் அனுமதிக்கவில்லை

(யாழ்ப்பாணம்)

வீட்டிற்குள் இருந்து தனது கணவரை வெளியே அழைத்த இராணுவத்தினர் அவரைச் சுட்டுக் கொன்றதாக வலிவடக்குப் பகுதியிலிருந்து கடந்த வியாழன்று யாழ்ப்பாணம் வந்து சேர்ந்த அம்மையார் ஒருவர் தெரிவித்துள்ளார்.

கடந்த வருடம் ஒக்ரோபர் மாதம் இருபதாம் திகதி இச்சம்பவம் நிகழ்ந்ததாக அவர் கூறினார். அன்றைய தினம் இராணுவத்தினர் எமது வீட்டிற்கு வெளியே நின்று வீட்டிற்குள் இருப்பவர்களை வெளியே வருமாறு உத்தரவிட்டனர். இவ்வுத்தரவை ஏற்று எனது கணவர் வெளியே சென்றபோது திடீரென ஒரு வெடிச்சத்தம் கேட்டது. இருந்தபோதிலும் நான் வெளியே செல்லவில்லை பல மணிநேரமாக கணவர் திரும்பாததால் வெளியே சென்று பார்த்தேன். அங்கே அவர் இறந்து கிடக்கக் காணப்பட்டார்.

அங்கு நின்ற இராணுவத்தினர் என்னை அழுவதற்குக் கூட அனுமதிக்கவில்லை. அத்துடன் எனது கணவரின் உடலை எரிக்கவும் அனுமதிக்கவில்லை. இதனால் நாம் எமது முற்றத்தில் இருந்த பழைய பதுங்கு குழியினுள் அவரது சடலத்தைப் போட்டு மூடிவிட்டோம். என்று கூறினார்.

மேலும் அங்கு நடந்தவை பற்றி அவர் கூறுகையில், இறுதியாக எம்மை விடுவிப்பதற்கு முன்னர் அனைவரையும் அழைத்த இராணுவத்தினர் இங்கு நீங்கள் பட்ட கஷ்டங்களை வெளியே எவருக்கும் சொல்லக் கூடாது என்று எச்சரித்த பின்னரே எம்மை அனுப்பினர் என்று கூறினார்.

(அ) (லோ)

## ஆசியாவில் அமெரிக்காவின் வீண் தலையீடு கூடாது

### = ஜப்பான் பிரதமர் கைபூ

(டோக்கியோ)

ஆசிய நாடுகளின் விவகாரங்களில் அமெரிக்கா வீணாகத் தலையிடக் கூடாது என்று ஜப்பானிய பிரதமர் டோசிகி கைபூ அடுத்தமாதம் அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ்ஷைச் சந்திக்கும் போது கேட்டுக்கொள்ளவுள்ளார். ஜப்பானிய வெளியுறவு அமைச்சின் சிரேட்ட அதிகாரி ஒருவர் இது பற்றிக் கூறுகையில் ஆசியநாடுகளே முதன்மையாக இருக்க அமெரிக்கா முன்வர வேண்டுமெனக் கேட்டுக் கொண்டார். ஜப்பானியப் பிரதமர், அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ்ஷை அடுத்த வியாழக்கிழமை சந்திக்கவுள்ளார். கைத்தொழில் மய நாடுகளின் மாநாடு அடுத்த வாரம் லண்டனில் நடைபெறும்.



## சென்னை நகைக்கடையில் இல. இளைஞர் கொள்ளை

(சென்னை)

சென்னை நகரில் நகைக் கடைக்குள் புகுந்த இலங்கைத் தமிழ் இளைஞர் மூவர் நகை, பணம் ஆகியவற்றைக் கொள்ளையடித்து மறைந்தனர்.

சென்னை குரோம்பேட்டையிலுள்ள சுகன் ஜூவலரிஸ் என்ற நகைக்கடையை அதன் உரிமையாளர் பூட்டிக்கொண்டிருந்தபோது மோட்டார் சைக்கிளில் வந்த மூன்று வாலிபர்கள் உரிமையாளரைக் கொல்லப் போவதாக மிரட்டிவிட்டு கடைக்குள் புகுந்து அங்கிருந்த பணம், நகைகளைச் சுருட்டிக் கொண்டு மின்னல் வேகத்தில் பறந்தனர். இக் கொள்ளையில் ஈடுபட்டவர்கள் இலங்கைத் தமிழ் இளைஞர்களாக இருக்கலாம் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

## தரை இலக்கை தாக்கும் பிருதுவி சோதனை வெற்றி

(சென்னை)

இந்தியாவிலே வடிவமைத்துத் தயாரிக்கப்பட்ட தரையிலிருந்து ஏவப் பட்டுத் தரை இலக்கை தாக்கவல்ல பிருதுவி என்ற ஏவுகணையை இந்தியா மீளவும் வெற்றிகரமாக ஏவிப் பார்த்திருக்கிறது.

கடந்தவியாழனன்று சென்னையில் பாதுகாப்பு அமைச்சர் சரத் பவார் செய்தியாளர் கூட்டத்தில் பேசுகையில்" கடந்தவியாழனன்று பிற்பகல் 1-52 மணிக்கு இந்தஏவுகணை வெற்றிகரமாகச் செலுத்தப்பட்டது என்று தெரிவித்தார்.

## தமிழக கடல் எல்லையை பாதுகாக்க நடவடிக்கை

(சென்னை)

இலங்கைத் தமிழ்ப்போராளிகளின் நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்தவும் இந்தியாவின் கடல் எல்லையைப் பாதுகாக்கவும் தமிழக அரசாங்கம் பல நடவடிக்கைகளை மேற்கொள்ளவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

முதற்கட்டமாக இந்திய இலங்கை கடல் எல்லையின் முன் ஐந்து கடல் மைல் தூரத்திற்கு மீன் பிடிக்க அனுமதிக்கப்படமாட்டாது என்று தமிழக அரசு அறிவித்துள்ளது.

இந்தக் கட்டுப்பாடு நாளை திங்கட்கிழமை காலை 6·00 மணி முதல் நடைமுறைப்படுத்தப்படும் என்றும் தஞ்சை புதுக்கோட்டை, சிதம்பரனார், மற்றும் இராமநாதபுரம் மாவட்டங்களில் அமுலுக்கு வரும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழக அரசின் இந்தக்கட்டுப்பாடுகளை மீறுவோர்மீது சட்டப்படி கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அனைத்து மீனவர்களும் இந்தக்கட்டுப்பாட்டைகடைப் பிடித்து அரசுடன் ஒத்துழைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுவதாகவும்,

விசைப்படகுகள் வைத்திருக்கும் தமிழக மீனவர்கள் அரச மீனவத் துறையிடம் 15 ஆம் திகதிக்குள் படகுகளைப்பதிவு செய்துகொள்ள வேண்டுமென்றும் மற்றும் படகுகள் கட்டுமரங்களை 31 ஆம் திகதிக்குள் பதிவு செய்துகொள்ள வேண்டுமென்றும், மீனவர்கள் புகைப்படத்துடன் கூடிய அடையாள அட்டைகளை அரசிடம் இருந்து பெற்றுக் கொள்ளவேண்டுமென்றும் தமிழக அரசு தெரிவித்துள்ளது.

## கிணற்றுக்குள் பெண்ணின் சடலம்

(கொடிகாமம்)

பெண்மணி ஒருவரின் சடலம் அயல் வீட்டாரால் வீட்டுக் கிணற்றுக்குள் இருந்து கடந்த வியாழக்கிழமை பி. ப 3 30 மணியளவில் கண்டெடுக்கப்பட்டது.

இச்சம்பவம் பற்றி கூறப்படுவதாவது நுணாவில் மேற்கு காரியாமூலை வீதியைச் சேர்ந்த ஏழுபிள்ளைகளுக்கு தாயான பொன்னையா மனோன்மணி வயது (52) என்பவரே சடலமாக எடுக்கப்பட்டவராவார் இவர்குடும்பத்தகராறின் காரணத்தினால் தான் தற்கொலை செய்ததாக தெரியவருகின்றது. இவர் கடந்த புதன் இரவு வேளையில் கிணற்றுக்குள் வீழ்ந்து தற்கொலை செய்தார் என அறியப்படுகின்றது. (86)

## சிவராஜனை தேடிய பொலிஸ் மரணம்

(சென்னை)

ராஜீவ்காந்தி கொலை தொடர்பாக ஒற்றைக்கண் சிவராஜனைத் தேடும் முயற்சியில் ஈடுபட்ட பொலிஸ்காரர் ஒருவர் சூடுபட்டு மரணமாகியுள்ளார்.

பிரகாசம் என்ற பொலிஸ் கான்ஸ்டபிள் கவனயீனமான முறையில் ரைபிளை உபயோகித்ததால் திடீரென அது வெடித்து சகபாடியான கான்ஸ்டபிள் வெங்கடேஷ்வரராவ் மீது பட்டு அவர் இறந்து விட்டார்.

சிவராஜனைத் தேடிவிட்டு வரும்போதே இந்த விபத்து ஏற்பட்டதாகவும் பிரகாசத்திற்கெதிராக ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

**முத்தமிழ்விழா மலர் - ஒரு நோக்கு**

தவிர்க்க முடியாத காரணத்தினால் இன்று வெளிவரவில்லை.

